DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 148/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | முகமது சுபைர் அலி | Age | : | 37 |
| F/N | : | முகம்மது கான் | Occupation | : | எலக்ட்ரீசியன் |
| Village | : | மேலக்கோட்டை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 03-rd day of November 2022.

**03.11.2022.**

**முதல் விசாரணை**

**1.** நான் இராமநாதபுரம் மாவட்டம் மேலக்கோட்டையில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. வழக்கின் இறந்த நபரான முஜாகிதின் என்பவர் எனது ஊரை சேர்ந்தவர். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 03.30 மணியளவில் மேலக்கோட்டை ECR ரோடு சந்திப்பில் இராமேஸ்வரத்தில் இருந்து தேவிப்பட்டிணம் நோக்கி வந்த TN 65 7777 என்ற பதிவெண் கொண்ட யுனோவா கார் வந்தது.

**2.** நான் சம்பவம் முடிந்த பிறகு சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு இரண்டு நபர்களில் ஒரு பெண் கருவை முள்ளு செடிக்குள்ளும், மற்றொரு நபர் சற்று தள்ளியும் கிடந்தனர். யுனோவா கார் இருந்த இடத்திற்கு சற்று தள்ளி இருசக்கர வாகனம் ஒன்று இருந்தது. இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை நான் பார்க்கவில்லை. அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த கொத்தனார் மற்றும் மற்ற நபர்களின் உதவியுடன் காயம்பட்ட அந்த பெண்ணை ஆட்டோவில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

**3.** பின்னர் ஆம்புலன்ஸ் வர தாமதமானதால் காயம்பட்ட முஜாகிதினை போலீஸ் வேனில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். காயம்பட்ட பெண்ணிற்கு முகம், மற்றும் காலில் ரத்தக்காயமும், முஜாகிதினுக்கு கால் எலும்பு முறிந்தும், தலையில் ரத்தக்காயமும் இருந்தது. மருத்துவமனை சென்ற பிறகு முஜாகிதின் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இறந்த நபரான முஜாகிதின் என்னுடைய பெரியப்பா மகன் என்றால் சரிதான். நான் இராமநாதபுரம் அமிர்த ஜோதி வளையல் கடையில் பணிபுரிந்து வருகிறேன். போலீசார் என்னை எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்றே மருத்துவமனையில் வைத்து மாலை 04.45 மணிக்கு விசாரித்தார்கள். சம்பவ இடம் அருகே காட்டுரணி ரோட்டில் தெற்கு புறம் கோட்டைச்சாமி என்பவர் இரண்டடுக்கு மாடி கட்டிடம் கட்டிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

2. ECR ரோட்டிற்கு 10 அடி தள்ளி தான் அந்த கட்டிடம் கட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். நானும், ராஜா முகமுதும் சம்பவ இடத்திற்கு ஒன்றாக வந்தோம் என்றால் சரிதான். விபத்தை குறித்து உங்களுக்கு யார் தெரிவித்தது என்றால் யாரும் தெரிவிக்கவில்லை நான் போகும் போது விபத்து நடந்திருந்தது. நான் தான் மற்றவர்களுக்கு தகவல் சொன்னேன். மேலக்கோட்டையில் இருந்து இராமநாதபுரம் செல்வதற்கு மேலக்கோட்டையிலேயே பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். காட்டுரணி ரோட்டை தாண்டி தான் மேலக்கோட்டை உள்ளது என்றால் சரிதான்.

3. காட்டுரணி ரோட்டில் இருந்து மேலக்கோட்டை செல்லும் வழியில் கோட்டைச்சாமியின் கட்டிடம் உள்ளதால் ECR ரோட்டில் வாகனம் வருவது காட்டுரணி ரோட்டில் இருந்து பார்த்தால் தெரியாது என்றால் சரிதான். இந்த வாகன விபத்து இந்த வழக்கின் இறந்த நபரான முஜாகிதின் என்பவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் அதை பற்றி தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது அந்த இடத்தில் 10, 15 நபர்கள் இருந்தார்கள். அந்த நபர்கள் அனைவரும் கோட்டைச்சாமி கட்டிடத்தில் பணிபுரிந்த நபர்கள் ஆவார்கள்.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**